000026

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., | ஆணையர், |
| நகராட்சி நிர்வாக இயக்குநர், | அம்பத்தூர் நகராட்சி. |
| சேப்பாக்கம், சென்னை–5. | |
| மூ.மு. எண் : 57528/2009/ஆர்–1 | நாள். 24.12. 2009. |

ஐயா,

பொருள் வரி – அம்பத்தூர் நகராட்சி – காலிமனை நிர்ணயிப்பது குறித்து தெளிவுரை கோரியது – சம்பந்தமாக.

பார்வை
1. தங்கள் அலுவலக கடிதம் ந.க.எண். 11236/09/அ1, நாள். 18.11.09.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 57811/09/ஆர்–1 நாள். 30.11.09.

*******

பார்வையில் காணும் தங்கள் அலுவலக கடிதத்தில் கோரிய காலிமனை வரிவிதிப்பு செய்வது குறித்த பார்வை 2–ல்காணும் கடிதத்தில் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. (நகல் இத்துடன் இணைக்கப்படுகின்றது). அதில் தெரிவித்துள்ளபடி இதுவரை காலிமனை வரிவிதிப்பு செய்யாத அனைத்து இனங்களுக்கும் 13 அரையாண்டுகள் வரை தற்சமயம் வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணைப்படி வரி விதிப்பு செய்யப்பட வேண்டும். வரிவிதிப்பு செய்யப்படும் அரையாண்டுக்கான வரியையும் சேர்த்து 13 அரையாண்டுகளுக்கு காலிமனை வரி விதிப்பு செய்யப்பட வேண்டும். இந்த வரி விதிப்பு 13 அரையாண்டுகளுக்கு முந்தி வரி விதிக்கும் இனங்களுக்கு மட்டுமே பொருந்தும். 13 அரையாண்டுகளுக்குள் பத்திரம் பதிவு செய்திருப்பின் எந்த அரையாண்டில் பத்திரம் பதிவு செய்யப்பட்டதோ அந்த அரையாண்டிலிருந்துதான் வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும். மூலதன மதிப்பில் அரசு ஆணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் அதற்கு முந்தைய காலங்களுக்கும் வரி விதிப்பு இதுவரையும் செய்யப்படாமல் இருப்பின் மூலதன மதிப்பில் வரிவிதிப்பு செய்ய இயலாது எனவும், சதுர அடி அடிப்படையிலேயே வரி விதிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஓம்/– து. சந்திரசேகரன்,
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக

<u>இணைப்பு:-</u> மேலே உள்ளபடி.

<u>நகல்:-</u>

அனைத்து மாநகராட்சி / நகராட்சி ஆணையர்கள்,
மண்டல இயக்குநர்கள். //ஆணைப்படி / அனுப்பப்படுகின்றது. //
கண்காணிப்பாளர்.